வணக்கம் சொல்லி வணங்குகிறோம்
எங்கள் வீரர் உங்கள் மலர்பாதம்
உமை நினைக்கும் எங்கள் மனங்களிலே
உங்கள் நினைவுகள் எல்லாம் மனப்பாடம்

கனக்கும் நினைவுகள் கல்லாக
நீங்கள் வந்து போகுறீர் நினைவாக
உமக்கும் எமக்கும் உறவாக நம்
உணர்வில் இருக்குது உயிர்ஆக

ஒரு சுடர் ஏற்றி அளுங்குரல் காட்டும்
உரிமைகள் இல்லாத பாவிகள் நாம் 2

மண்ணோடு வாழும்
மண்புழு போல
நெஞ்சோடு வாழும்
நினைவுகள் கோடி
எம்முள்ளே ஓடும்
நினைவுகள் எல்லாம்
எமை விட்டுப் போகுமா
பகைக் அஞ்சி ஓடி
காத்தாடி போல நினைவுகள் சுற்றும்
கல்லறை காத்து உணர்வினை தட்டும் 2
தோற்றாடி போனோம் தோலைந்தாடி போனோம்
ஊற்றுக் கண் திறந்து உயிர் கொள்வோம் நாமே

வணக்கம் சொல்லி வணங்குகிறோம்

மணி ஒலி கேட்டு
அலை கூட ஓயும்
மனதினில் உங்கள்
நினைவலை பாயும்
அணிவகுப்போடு
அகல் விளக்கை ஏற்றி
அன்றும்மை தொழுதோம்
தியாகத்தை போற்றி
இன்றதை எண்ணி வெடிக்குது நெஞ்சம்
என்னதான் செய்தோம் பதைக்குது உள்ளம் 2
கன்றதைக் காணா தாய் பசு போல
காணாமல் உம்மை தேடுகின்றோமே

வணக்கம் சொல்லி வணங்குகிறோம்

மாவீர மொழிகள் இசைத்தட்டு
அகம் கலையகம்